அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவரைது நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் திரு.செ.முருகன்

ந.க.எண். 92/2024 நாள். 26.07.2024

பொருள்: மனைப்பிரிவு - தேனி மாவட்டம் அனுமந்தன்பட்டி பேரூராட்சி அனுமந்தன்பட்டி வருவாய் கிராமம் நில அளவை எண். 510-4. 510/5, 515/2 மற்றும் 515/3 இல் 9050 சமீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியது இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை: 1)இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர். நகர் ஊரமைப்புத் துறை, தேனி அவர்களின் தொழில் நுட்ப அனுமதி ந.க.எண், L.P/AD DTCP (TD) NO. SWP/134/2023 . நாள்.01.12.2023.

2)திரு.மா.ஆனந்த் கதவு எண்.13/A வார்டு.1 மந்தையம்மன் கோவில் தெரு கூடலூர், தேனி மாவட்டம் என்பவரது மனு நாள். 21.06.2024.

3) உத்தமபாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திரப் பதிவு எண். 2720/2023, நாள்.23.11.2023.

4) அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை , நாள் 04.05.2017.

5) அரசாணை எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை . நாள் 04.02.2019

6) அரசாணை எண். 16 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 31012020.

7)அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 23.09.2020.

8) அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.08.12.2020.

9) அரசாணை எண். 112 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.22.06.2017.

10) திரு.மா.ஆனந்த் கதவு எண்.13/A வார்டு.1 மந்தையம்மன் கோவில் தெரு கூடலூர், தேனி மாவட்டம் என்பவரது ஒப்புதல் கடிதம் நாள். 10.07.2024.

11) தொடர்புடைய ஆவணங்கள்.

ஆணை:

தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1 இல் காணும்தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில், தேனி மாவட்டம், அனுமந்தன்பட்டி பேரூராட்சி, அனுமந்தன்பட்டி

வருவாய் கிராமம் சர்வே எண். 510/4. 510/5, 515/2 மற்றும் 515/3இல் 9050 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில்அமைந்துள்ள மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்திட கோரி வரப்பெற்ற பார்வை 2 இல் காணும் மனுதாரரான திரு.மா. ஆனந்த் என்பவரது விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக நிபந்தனைகளுக்குட்பட்டு L.P/AD DTCP (TD) NO. SWP/134/2023 என எண்ணிடப்பட்டு மனைகளுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.மா. ஆனந்த் என்பவரது பார்வை 3இல் காணும் கிரையப்பத்திரத்தின்படி, உத்தமபாளையம் சார்பதிவாளர் பத்திரப்பதிவு அலுவலக ஆவண எண். 2720 / 2023 நாள்.23.11.2023 இன்படி பாதைக்கான இடத்தினை மேதகு தமிழ்நாடு ஆளுநர்அவர்களது பெயரில் பதிவு செய்யப்பட்டு மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் அரசாணைகள் 4, 5, 6, 7, 8 மற்றும் 9 இன்படி மனையிடத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், அரசாணை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017 இன்படி நிலப்பயன் மாற்று கட்டணத் தொகையும் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டள்ளதன்படி மனைப்பிரிவிற்கு பின்வரும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	கட்டண விவரம்	தொகை	செலுத்தும் சீட்டு எண்/சலான் மற்றும் நாள்
1	கூர்ந்தாய்வுக் கட்டணம்	25000	
2	ஆய்வுக் கட்டணம்	2000	
2	நிலப்பயன்பாட்டு மாற்றக் கட்டணம் ஏக்கருக்கு ரூ290000/- வீதம் 2.23 ஏக்கருக்கு தொகை ரூ 646700 இக்கு 3 சதவீதம் (சார்நிலை கருவுலத்தில் செலுத்திட வேண்டும்)	20000	
3	மனைப்பிரிவு முறைப்படுத்துதல் கட்டணம் பிளாட் 1க்கு 1000 வீதம் 47 பிளாட்டுக்கு	47000	
4	டேவணித்தொகை 1 ஏக்கருக்கு 100000 வீதம் 2.23க்கு ரூ	223000	
	மொத்தம்	317000	

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், இணையதளம் மூலமாக (Transaction ID No: b6ca1689-af46-4452-9929-37f75f7ofc27) வசூல் செய்யப்பட்டுள்ளது. அனுமந்தன்பட்டி பேரூராட்சி அனுமந்தன்பட்டி வருவாய் கிராம சர்வே எண். 510/4. 510/5, 515/2 மற்றும் 515/3 இல் 9050 சமீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு, தேனி நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி L.P/AD DTCP (TD) NO. SWP/134/2023 என எண்ணிடப்பட்டு 47 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதன்படி இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது. மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிட வரி வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேலும் முறைப்படுத்துதல் கட்டணம் வசூலித்தது குறைவு என உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலோ/ அரசாலோ / ந.ஊது/ மூலம் தெரிவிக்கப்பட்டு மீள கூடுதல் கட்டணம் வசூலிக்கத் தெரிவித்தால் அவற்றை பேரூராட்சி நிர்வாகம் தெரிவித்த 7 தினங்களுக்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு முறைப்படுத்தப்படுகிறது.

அனுமந்தன்பட்டி பேரூராட்சி தேனி மாவட்டம் 625533

செயல் அலுவலர்
அனுமந்தன்பட்டி பேரூராட்சி
தேனி மாவட்டம்.

இணைப்பு: மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்

1.திரு.மா.ஆனந்த், சீதாலட்சுமி
கதவு எண்.13/A மந்தையம்மன் கோவில் தெரு.
கூடலூர்
தேனி மாவட்டம்.

நகல்

1) தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

2) தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

3) உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

4) சார்பதிவாளர், உத்தமபாளையம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது